IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.62/2020
DEPOSITION OF WITNESS (PW2)

வா.சா. 2 சாட்சி தேன்மொழி க.பெ.சத்தியமூர்த்தி

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 16.10.2024 in accordance with the provisions of Act XX141.**

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. வாதியின் மனைவியும், நானும் உடன்பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். தாவா வழக்குச் சொத்திற்கு யாருடைய பெயரில் பட்டா உள்ளது என்றால் வாதியின் அம்மா வேட்டையக்காள் பெயரில் உள்ளது. தற்போது கூட்டுப்பட்டாவாக மாற்றப்பட்டுள்ளது. மேற்படி கூட்டுப்பட்டா வாதி மற்றும் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

2. நான் தாக்கல் செய்த நிரூபணவாக்குமூலத்தில் 25.7.1999ம் தேதி வழக்கின் பிரதிவாதி தாவாச் சொத்தை எனக்கு தானம் எழுதிக்கொடுத்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தானப்பத்திரம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி தானப்பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும் என்றால் சரிதான். எனக்கு தாவா வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்றும், வாதியின் மனைவியும் நானும் உடன்பிறந்த சகோதரி என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. தாவாச் சொத்து இன்றுவரை வாதி மற்றும் பிரதிவாதியின் கூட்டு அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

/sd/E.Manikandan

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.